# பெரம்பலூர் நகராட்சி

**2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் – 11-ம் நாள் திங்கள்கிழமை**

**காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 11.04.2022 | **பொருள்01:** தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.<br>தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது. | நகர்மன்றத் தீர்மான எண்.19 அனுமதிக்கப்பட்டது |

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால்

ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2.00 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் பெரம்பலூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 1.59 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) அசல் மற்றும் வட்டி | 14.86 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.18 |
| | **மொத்தம்** | **16.63** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பெரம்பலூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளவும் ஏற்கனவே மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் மற்றும் தற்போது மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கும் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும் (பட்டியல் இனைக்கப்பட்டுள்ளது) சொத்து வரி மற்றும் காலிமணைவரி பொது சீராய்வு 01.04.2022 முதல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.<br>8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை | |
| 11.04.2022 | **பொருள்02:** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் எரியும் மின் விளக்குகள் மற்றும் சாலையின் மைய பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளில் மாற்றி புதியதாக பொருத்த பயன்படும் Hydraulic ladder வாகனம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றை பழுது சீர் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | நகர்மன்றத் தீர்மான எண். 20<br>அனுமதிக்கப்பட்டது |
| 11.04.2022 | **பொருள்03:** பெரம்பலூர் நகராட்சி 20.59 ச.கீ.மீ பரப்பளவில் மாவட்ட தலைநகரமாக அமைந்துள்ளது. இந்நகரின் மொத்த சாலையின் நீளம் 164.32 கி.மீ ஆகும். திட்டப்பணிகள், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து பணிகள் மேற்கொள்ள நகர் மன்றதலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டிற்கு தனித் தனியே ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது. தற்போது இந்நகராட்சியில் 2 ஈப்பு வாகனங்கள் மட்டுமே உள்ளது. எனவே நகர்மன்றதலைவர் பயன்பாட்டிற்கு கீழ்காணும் விவரப்படி ரூ. 7,38,288/- மதிப்பீட்டில், கூடுதலாக ஒரு ஈப்பு வாகனம் வாங்கி கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதி | நகர்மன்றத் தீர்மான எண். 21<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>Sl.No</th><th>Work details</th><th>Qty</th><th>Amount</th></tr>
<tr><td>1</td><td>Mahindra & Mahindra Bolero ( BS6) , disel engine , 5 Speed synchromesh gear box, Power steering spare wheel carrier and rim , wiper Motor , Steel front end structure , RUPD/ SUPD, Mirror LH/ RH ( One each) driver seat, noise shield , AsA , tool kit and CMVR kit with 5 nos nylone tyres.</td><td>1</td><td>7,38,288</td></tr>
<tr><td></td><td>Total</td><td></td><td>7,38,288</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
<u>ந.க.எண். 2502/2022/இ1</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.04.2022</td>
<td>
பொருள்04: நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையை தொடர்ந்து பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் சாலை பணிகள் , குடிநீர் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளும் பொழுது பணிகள் தரமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் பணி நடைபெறும் போது நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் வாகனங்களில் கீழ் கண்ட உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 3.90 /- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
1. Sieve for testing road metal gradation<br>
2. Infra red thermometer for testing mix temperatures<br>
3. Core cuttingmachine<br>
4. Hammer<br>
5. Steel scale<br>
6. Chisel<br>
7. Mould for concrete cube test<br>
8. Measurement tap<br>
9. Road meter<br>
10. Levelling Instrument<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
<u>ந.க.எண். 002556/2022/இ1</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.22 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 11.04.2022 | **பொருள்05:** பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 வரை அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் வாயிலாக அமையப்பெற்றுள்ள 7 எண்ணிக்கையிலான கழிவு நீரேற்றும் ( Lifting Station) நிலையங்களிலிருந்து பெறப்படும் கழிவுநீர் , துறைமங்கலத்தில் உள்ள பிரதான கழிவு நீருந்து ( Main Pumping Station) நிலையம் சென்றடைந்து நெடுவாசல் சாலையில் அமைக்கப்பட்டுள்ள 4.20 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant ) அடைந்து , சுத்திகரிக்கப்பட்ட நீர் காட்டு வாய்க்கால் வழியாக வெளியேற்றப்படுகிறது. அவ்வாறு வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழியோர கிராம மற்றும் நகர்புற பகுதிகளில் விவசாய நிலத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மேற்கண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ( OCEMS) Online Contionous Effluent Monitoring system அமைப்பினை ஏற்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட நீரின்தன்மை ( BOD, COD, Ph, TSS) யினை Remote system Access, Multi Server data transmission system , Record of outline parameters evaluation மற்றும் Software establishment with central server at TNPCB and CPCB பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்குறியிட்ட பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ . 37.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண். 002557/2022/இ1** | நகர்மன்றத் தீர்மான எண்.23 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11.04.2022 | **பொருள்06:** பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.938/2021-பெ.மா எண்ணுடைய **17.12.2021, 21.01.2022–ம்** தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.03/2022 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரம்பலூர் வடக்கு சர்வே எண் 273/4ஏ**2–ல் 2.2725 (9196.40** ச.மீ) ஏக்கர் நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு.எம்.கோவிந்தராஜ் மற்றும் மூவர் நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மென்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.**1000/–** மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை சிறுபாலங்கள், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.938/2021–பெ.மா– எண்னுள்ள 17.12.2021 மற்றும் 21.01.2022-ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்03/2022–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரம்பலூர் வடக்கு சர்வே எண்273/4ஏ**2–ல் 2.2725 (9196.40** ச.மீ) ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.7313/2021/எப்1.** | நகர்மன்றத் தீர்மான எண்.24 அனுமதிக்கப்பட்டது |
| 11.04.2022 | **பொருள்07:** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை (நிலை) எண்.**52** (ந.நி.4) நாள்:**30.3.2022** ( சொத்துவரி பொதுசீராய்வு **2022-2023**ம் **(01.04.2022)** முதலாம் அரையாண்டு முதல் மேற்கொள்ள வரப்பெற்ற) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.2523/2022/அ1** | நகர்மன்றத் தீர்மான எண்.25 பதிவுசெய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11.04.2022 | **பொருள்08:**அரசாணை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:30.3.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்வதற்கு நாளிதழ் விளம்பர செலவினம் மற்றும் பதிவேடுகள், படிவங்கள் அச்சடித்து கொள்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு (இரண்டு லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.2523/2022/அ1** | நகர்மன்றத் தீர்மான எண்.26 அனுமதிக்கப்பட்டது |

**நகர் மன்ற தலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**